# DEPOSITION OF WITNESS
## (Chapter XX III Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1
## RAMANATHAPURAM
## CASE NO: CC. 164/2011
## Deposition of witness for prosecution -PW-4

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ஹிப்புரசூல் |
| Father Name | : | திரு.பாரூக் |
| Village | : | சதக்சாலை, மேலத்தெரு |
| Taluk | : | கீழக்கரை |
| Calling | : | ரியல் எஸ்டேட் |
| Religion | : | இஸ்லாம் |
| Age | : | 54 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 12 th day of February 2020.

முதல் விசாரணை :-

நான் தற்போது கீழக்கரையில் குடியிருந்து வருகிறேன். ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கீழக்கரையில் நானும் என் மனைவி மற்றும் அவரது அக்கா குடும்பம் கூட்டுக்குடும்பமாக இருந்து வருகிறோம். சம்பவ காலகட்டத்தில் நான் சென்னையில் மர வியாபாரம் செய்து வந்தேன். 21.12.2010ம் தேதியன்று குடும்பத்தினர் அனைவரும் சென்னையில் இருந்து கீழக்கரைக்கு உறவினர் திருமணத்திற்காக வந்தோம். 01.01.2011ம் தேதியன்று திருமணம் முடிந்தது. நாங்கள் 03.01.2011ம் தேதியன்று சென்னை செல்ல கிளம்ப வேண்டி என்னுடைய மனைவி சாஜிதாவின் நகைகளையும், அவரது அக்கா சித்திக் மல்லிகாவின் நகைகளையும் மொத்தமாக 128 பவுன் நகைகளையும், ரொக்க பணம் ரூ.5, 70,000/-, வாட்ச், 3 செல்போன்கள் ஆகியவற்றை எடுத்து என்னுடைய அறையில் படுக்கையில் இருந்த மரப்பலகை டிராயரில் (Open side Box) வைத்தேன். காலை 06.00 மணிக்கு கிளம்புவதற்காக எழும்பி பார்த்தபோது நகை வைத்திருந்த பை உட்பட மேற்குறிப்பிட்ட அனைத்தையும் காணவில்லை. இதனால் அ.சா.1 ஆன எனது மனைவியின் அக்கா கணவர் முஸ்லீம்மில் கீழக்கரை காவல்நிலையம் சென்று மேற்படி சம்பவம் தொடர்பாக புகார் மனு கொடுத்தார். அதன்பிறகு போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்த்தார்கள். மோப்ப நாய் வரவழைக்கப்பட்டு விசாரணை நடந்தது. 15 நாட்கள் கழித்து போலீசார் திருடனை பிடித்துவிட்டதாக கூறினார்கள். ஆஜர் எதிரியுடன் சேர்த்து மொத்தம் மூன்று நபர்களை எதிரிகளாக சொன்னார்கள். அதன்பின்னர் திருடுபோன நகைகள் நீதிமன்றத்தில் மனு செய்து அ.சா.2 பெற்றுக்கொண்டார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்ட நகைகளில் 20 1/4 பவுன் நகைகள் மற்றும் 1 லட்ச ரூபாய் ரொக்கம் ஆகியவரை எதிரிக்கு சொந்தமானது என்று அதனை பெற்றுத்தருமாறு எதிரி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார் என்றால்

சரிதான். இவ்வழக்கில் முதன்முதலில் இரண்டு நபர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக தெரியவந்தது என்றால் சரிதான். எதிரியை சட்டவிரோதமாக காவலில் வைத்திருப்பதாக கூறி உயர்நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவை அவரது மனைவி தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நகைகள் அனைத்தும கிடைக்கப்பெற்றதால் காவல்துறைக்கு நன்றி கூறி எனது குடும்பத்தினர் மூலமாக பத்திரிக்கையில் கொடுக்கப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியும். ஆனால் நான் கொடுக்கவில்லை. நான் வருமான வரி செலுத்தும நபர் என்றால் சரிதான். என்னுடைய வருமானம் மற்றும் சொத்துக்கள் சம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் போலீசார் கேட்டு விசாரணையின்போது நான் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. நகை மற்றும் ரொக்கப்பணம் சம்மந்தமாக வருமானவரி கணக்கு காண்பித்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வருட வருமானவரி கணக்கில் சொத்து மற்றும் நகைகள் ஆகியவற்றை காண்பித்துள்ளேனா என்றால் சொத்துக்களை காண்பித்துள்ளேன். நகைகள் சம்மந்தமாக காண்பிக்கவில்லை. காணாமல் போன நகைகளில் என்னுடைய மனைவியின் நகைகள் எத்தனை பவுன் என்றால் ஞாபகமில்லை. என் மனைவிக்கு சொந்தமான நகைகள் என்ன வகைகள் மற்றும் அதன் மாடல், எடை குறித்து குறிப்பிட்டு தெரியுமா என்றால் தெரியாது. ரொக்க ரூ.5,70,000/-தில் எவ்வளவு பணம் என்னுடையது என்றால் என்னுடைய பணம் எதுவுமில்லை. சம்பத்தன்று இரவு நானும் என் மனைவியும் ஒரு அறையிலும், அவருடைய அக்காவும், அக்கா கணவரும் வேறொரு அறையிலும் தங்கியிருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நாங்கள் அனைவரும் சென்னையில் ஒரே கூட்டுக்குடும்பமாக தான் வசித்தோம். சென்னையில் மாகலிங்கபுரத்தில் வசித்து வந்தோம். சம்பவத்தன்று எங்கள் குடும்பம் மாடியிலும், என் மனைவியின் அக்கா குடும்பம் கீழேயும் தூங்கினோம். நாங்கள் படுத்திருந்த அறைக்கதவை திறந்து தான் வைத்திருந்தோம். அன்றையதினம் கைரேகை நிபுணர்கள் வந்தார்களா என்றால் வந்தார்கள். வந்து கைரேகை எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள். முதல் எதிரியை பிடித்தது சம்பவம் நடந்து 10 நாட்களுக்கு பிறகாகும். சம்பவத்தன்று புகார் கொடுக்க நான் காவல்நிலையம் செல்லவில்லை. அதன்பின்பு ஒரு நாள் சென்றேன். எந்த தேதி என்று ஞாபகமில்லை. நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இரு குடும்பத்தினர் ஒவ்வொருவரும ஏமாற்றிக் கொள்ள வேண்டும என்பதற்காக திருடுபோனதாக பொய்யாக சொல்லி எதிரியை இந்த வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. மறுவிசாரணை - இல்லை.

(ஒப்பம்/-ஜெ.ஜெனிதா)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.